1992 பிப்ரவரி 4]

40—

சம்பைப்பட்டினம் மீனவர்களுக்கு காலனி வீடுகள்

* 3015 திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சம்பைப் பட்டினம் மீனவர்களுக்கு 100 காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே: கடந்த ஆட்சிக் காலத்தில் இதற்கான பட்டாக்களையும், சிட்டாக்களையும் கிடப்பிலே போட்டுவிட்டு, காங்கிரஸ்காரன் என்ற காரணத்தால் அது நிராகரிக்கப்பட்டிருக்கிறது. மீனவ நண்பன் முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்திலே மீனவர்களின் வாழ்வை உயர்த்திக் கொடுத்தார். மீனவர்களையெல்லாம் வாழவைத்த தெய்வமாக விளங்கினார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஒரே அரசியல் வாரிசாக இருக்கின்ற (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே நீங்கள் இல்லை என்று சொல்லலாமா? ஆகவே என்னுடைய வேதனையை சாதனையாக்க நீங்கள் முன்வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1989-90 ஆம் ஆண்டு மொத்தம் அறிவிக்கப்பட்ட மூவாயிரம் வீடுகளில் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 303 வீடுகளும், 1990-91 ஆம் ஆண்டில் மொத்தம் அறிவிக்கப்பட்ட மூவாயிரம் வீடுகளில் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 948 வீடுகளும் கட்டி முடிக்கப் பட்டிருக்கின்றன. இதில் மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி இந்த ஆண்டிலும் தகுதியுள்ள மீனவர்கள் வீடு கட்ட மனைகளை வழங்க முன்வருவார்களேயானால் எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு கோரிக்கையை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS